பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 16 சனிக்கிழமை (29-05-1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 182

# மாற்று மாகாணசபையை அமைக்க எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி முடிவு

## நாளை மறுதினம் குருநாகலில் போட்டி அமைச்சரவை பதவியேற்பு

கொழும்பு, மே 29

வடமேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கு நடைபெற்ற தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய போதிலும், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தோரை அங்கு முதலமைச்சராக நியமித்து ஆட்சியை ஒப்படைத்ததை ஆட்சேபித்து—

அந்த மாகாண சபைகளுக்கு போட்டியாக மாற்று மாகாண சபைகளை அமைக்க எதிர்க்கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன

*நாளை மறுதினம் குருநாகலில் நடைபெறும் எதிர்க்கட்சியினரின் பேரணி மற்றும் பொதுக்கூட்ட நிகழ்வின்போது வடமேல் மாகாணத்துக்கான மாற்று மாகாணசபையின் முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் மக்களின் முன் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள்.*

ஐ.தே.கவின் மாகாண சபைக்கு சவாலாக எதிர்க் கட்சியினர் அமைக்கும் மாற்று மாகாண சபை நாளை மறுதினம் குருநாகலில் நடக்கும் கூட்டத்தில் வைத்து மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படும்.

வடமேல் மாகாணத்துக்கான — மாற்று மாகாண சபையின் — முதலமைச்சராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஜி எம். பிரேமச்சந்திரா அங்கு மக்களின் முன் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். அதனைத் தொடர்ந்து மாற்று மாகாண சபையின் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## குருநாகல் கூட்டத்தில் சிறிமா, சிறிமானி பேசுவர்

கொழும்பு, மே 29

எதிர்க்கட்சியினரின் — வடமேல் மாகாணத்திற்கான — மாற்று மாகாணசபை நாளை மறுதினம் பதவிப்பிரமாணம் செய்யவிருக்கும் குருநாகல் கூட்டத்தில், பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, லலித் அத்துலத்முதலியின் துணைவியாரான சிறிமானி அத்துலத் முதலி சர்வோதயத் தலைவர் ஏ.ரி ஆரியரத்தின, பத்திரிகையாளர் விக்டர் ஐவன் ஆகியோர் உட்பட பலர் இக்கூட்டத்தில் உரையாற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## யாழ். பாடசாலைகளுக்கு செவ்வாயன்று விடுமுறை

### புதன் வழமைபோல் இயங்கும்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை விடுமுறை தினமாக இருக்கும். அடுத்தநாள் புதன் கிழமை யாழ். கல்வித் திணைக்களமும் யாழ். மாவட்டப் பாடசாலைகளும் வழமைபோல் இயங்கும்.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தவே இந்த ஏற்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஹஜ்ஜுப் பெருநாளுக்காக ஜூன் முதலாம் திகதி விடுமுறை நாள் என்று முதலிலும் —

பின்னர் ஜூன் இரண்டாம் திகதியே விடுமுறை என்று சில தினங்களுக்கு முன்னரும் — அரசு பிரகடனம் செய்திருந்தது தெரிந்ததே! (உ)

## 4 ஆயிரம் தொன் மாவுடன் 'வாதுவ' கப்பல் இன்று வரும்

திருகோணமலை பிரிமா ஆலையில் 4 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு ''வாதுவ'' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் —

கப்பலில் தபால் பொதிகள் எடுத்துவரப்படுவதாக தகவல் நேற்றுவரை கிடைக்கவில்லை என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

## மட்டுநகரில் சில வீதிகளில் சைக்கிளில் செல்லத்தடை!

யாழ்ப்பாணம், மே 29

மட்டக்களப்பு நகரில் குறிப்பிட்ட சில வீதிகளில் சைக்கிளில் செல்வதற்கு ஸ்ரீலங்காப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

சந்தைப் பகுதியில் அண்மையில் மர்மக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே பாதுகாப்பின் நிமித்தம் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

சந்தைக்கு வருவோர் தமது சைக்கிள்களை மற்றோர் இடத்தில் நிறுத்தி விட்டே செல்லவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மன் அரசு வழங்கிய நிதியில்

## கைக்கு எட்டிய ரூ.60 லட்சம் வாய்க்கு எட்டாத நிலையில்!

யாழ்ப்பாணம், மே 29

இடம் பெயர்ந்த யாழ் மாவட்ட மக்களின் நிவாரணப் பணிகளுக்கென ஜேர்மன் அரசு வழங்கிய உதவி நிதியில் ஒரு பகுதியான, அறுபது லட்சம் ரூபா வேறு மாவட்டத்துக்குத் திசை திருப்பப்பட்டுள்ளது

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களின் நிவாரணப் பணிகளுக்கென ஜேர்மன் அரசு மொத்தம் 11 கோடியே 30 லட்சம் ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்திருந்தது அதிலிருந்து முற்பணம் வழங்கப்பட்டு விட்டது.

இந்த நிதி குடாநாட்டில் இயங்கும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு தொண்டர் நிறுவனமான ''போரூட்''டுக்கும் அவை சமர்ப்பித்த திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டதால் அவற்றுக்கு பங்கிட்டு வழங்கப்பட இருந்தது.

ஆனால் ''போரூட்'' நிறுவனம் 60 லட்சம் ரூபாவுக்கு வகுத்த திட்டத்துக்குக் கிடைக்கவிருந்த பணம் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையாகி விட்டது.

''போரூட்'' நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தினர் தயா

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஐ. தே. கவின் கட்டுப்பாட்டில் இருக்கும்

## கொழும்பு மாநகரசபையை கலைக்க எதிரணி முயற்சி!

கொழும்பு, மே 29

கொழும்பு மற்றும் தெஹிவளை — கல்கிசை (மவுண்ட் லவேனியா) மாநகர சபைகள் விரைவில் கலைக்கப்படலாம்.

மேல் மாகாணத்தில் பதவியேற்றிருக்கும் — பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தலைமையிலான — மாகாண அரசு இதற்கான பூர்வாங்க வேலைகளில் இறங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான எதிர்க் கட்சியான ஸ்ரீ. ல. சு. கட்சியைக் கொண்ட பொது மக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டுச் சேர்ந்து மேல் மாகாண அரசை அமைத்திருப்பது தெரிந்ததே

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் முதலாவது வேட்பாளராகப் போட்டியிட்டு, தற்போது மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றிருக்கும் சந்திரிகா குமாரணதுங்காவும்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டவரும் பின்னர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டவரான லலித் அத்துலத் முதலியும்—

தாங்கள் மாகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றினால் கொழும்பு, மற்றும் தெஹிவளை — கல்கிசை மாநகர சபைகளைக் கலைத்துவிடுவோம் என்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூறி வந்தனர் என்பது தெரிந்ததே.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மீட்பு நிதி

இதுவரை காலம் தமிழீழ மீட்பு நிதியைச் செலுத்தத் தவறியவர்கள் நாளை ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் தமது மீட்பு நிதிக் கட்டணைச் செலுத்தலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

### குண்டு வீச்சு!

வவுனியா ஈச்சம்குளம் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இரு ''புக்காரா'' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. மொத்தம் ஆறு குண்டுகள் அப்பகுதியில் வீசப்பட்டன.

### தெற்கில் வெள்ளம்

தென் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தால் மூவர் உயிரிழந்தனர்.

மாத்தறை, இரத்தினபுரி, மாத்தளை, நாவலப்பிட்டி, கொழும்பு, கம்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் 10 ஆயிரம் குடும்பங்கள் வீடிழந்துள்ளன.

## 50 வீத மக்களின் மனநிலை குடாநாட்டில் பாதிப்பு

### நோர்வே நிபுணர் கணிப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ். குடாநாட்டு மக்களில் 50 வீதமானவர்கள் பெருமளவில் மனோநிலை பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களின் நாளாந்த வாழ்க்கை சீரழிந்துள்ளதால் வாழ விருப்பமின்றி தற்கொலையை நாடும் நிலையில் அவர்கள் உள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் தாம் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து இத்தகவல்கள் தெரிய வந்துள்ளதாக நோர்வே நாட்டு மனோவியல் நிபுணர் டாக்டர் ஹரால்ட் ரெப்பிஸ்கார்ட் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாத காலமாக யாழ். மாவட்டத்தில் 3 அகதி முகாம்களிலும், 3 கிராமங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியில்

## கண் நோயாளர்களுக்கு நிபுணத்துவ சிகிச்சை இல்லை

கடுமையான கண் வியாதிகளால் பாதிக்கப்படும் நோயாளர்கள் உரிய நிபுணத்துவ சிகிச்சை இன்றி உபாதையுறும் அவலநிலை யாழ் மாவட்டத்தில் உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கண் சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும் ஒரேயொரு ஆஸ்பத்திரியாக விளங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் —

கண் வைத்திய நிபுணர் எவரும் இல்லாமையே இந்த அவலத்துக்குக் காரணமாகும்.

முன்னர் எல்லாம் யாழ். போதனா வைத்தியசாலையில் கண் வைத்தியச் சிறப்புப்

[ 2 ஆம் பக்கம் பார்க்க ]

## கடலோரப் பாதுகாப்புக்கு ராமநாதபுரத்தில் தனிப்படை

சென்னை, மே 29

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரப் பாதுகாப்புக்கு என சிறப்பு அதிரடிப் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அதிரடிப்படையினருக்கு நவீன இயந்திரத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் ஜாவர் செய்யது கூறினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் 45 பேரை கடந்த புதன்கிழமை பொலீஸார் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்நோயாளர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிற்சி பெற்ற நிபுணர்கள் இரண்டு பேருக்கு மேல் பணி புரிந்தது உண்டு. ஆனால் கடந்த ஏழு வருடங்களாக மாறி மாறி கண் சிகிச்சை நிபுணர் ஒருவர் மட்டுமே பணியாற்றும் நிலை இருந்து வந்தது.

ஆனால் இப்போது அந்த வசதியும் இல்லாமற் போய் விட்டது. வைத்திய நிபுணர் எஸ். குகதாசன் கடந்த வாரம் தொடக்கம் ஆறு மாத லீவில் லண்டன் சென்றுள்ளார். கண் வைத்தியம் சம்பந்தமாக உயர்கல்வி பெறுவதற்கு அவர் லண்டன் பயணமானார்.

அதனால் கண் சிகிச்சைப் பிரிவு வைத்திய அதிகாரிகள் மூவருடன் மட்டுமே இயங்கும் துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. (அ-15)

## மாற்று--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வர்.

மாற்று மாகாண சபைக்கு சட்ட ரீதியான அந்தஸ்தோ, அதிகாரங்களோ இல்லை என்றாலும்—

வடமேல் மாகாண சபையில் தங்களுக்குப் பெரும்பான்மை இருப்பதால்—

மாகாண சபை விவகாரங்களுக்கு தங்களது மாற்று மாகாண சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு எதிர்க்கட்சியினர் மக்களைக் கோருவர் என எதிர்பார்க்கப் படுகிறது;

இதே போன்ற கோரிக்கையை இலங்கையிலும், வெளிநாட்டிலுமுள்ள மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றிடமும் அவர்கள் விடுப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தென் மாகாண சபையிலும் தங்களுக்குப் பெரும்பான்மை இருப்பதால்—

அங்கு ஐ. தே. கவின் முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைக்குப் போட்டியாக அங்கும் மாற்று மாகாணசபை அமைக்கப்படும் என எதிரணித் தலைவர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொட எதிர்க்கட்சிகளின் சார்பில் தென்மாகாண முதலமைச்சர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

தென் மாகாணத்தில் எதிர்க்கட்சியினர் அமைக்கும் மாற்று மாகாணசபையின் முதலமைச்சராக அவர் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-6)

---

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக

**விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு**

நடத்தும்

# கலை விழா

இடம்:- ஸ்ரான்லிக் கல்லூரி
(யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்)

நேரம்:- இரவு 7.00 மணி
காலம்:- 30-05-93

(அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்)

**அன்பளிப்பு 10/- 15/-**

விளம்பர அன்பளிபபு
★ சயன்ஸ் ஹோல் ★

(சி/5180)

---

உ
பிள்ளையார் துணை

# திருமண அழைப்பு

விநாயகப் பெருமான் கிருபையை முன்னிட்டு,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸ்ரீமுக வருஷம் வைகாசி மாதம் 18 ஆம் நாள் (31 5 93) திங்கட்கிழமை சுக்லபட்ச ஏகாதசி திதியும் ஹஸ்த நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் பகல் 11.00 மணி முதல் 1.00 மணிக்குள் வரும் சிங்க லக்ன சுபவேளையில்,

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ முத்துச்சாமி குருக்களின் பௌத்திரனும் | பிரம்மஸ்ரீ குருசாமிக் குருக்களின் பௌத்திரியும் |
| சிவசுப்பிரமணிய சர்மா அவர்களின் கனிஷ்ட புத்திரனுமாகிய | பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்களின் புத்திரியுமான |
| சிரஞ்சீவி | சௌபாக்கியவதி |
| **சிவபாலசர்மாவிற்கு** | **மீனலோஜனியை** |
| (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்) | |

மணமகள் இல்லத்தில் கன்னிகாதான பாணிக்கிரகண திருமாங்கல்ய தாரணம் செய்ய ஸ்ரீ கைலாசபிள்ளையார் திருவருள் துணையுடன் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அனுக்கிரகத்துடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அச்சமயம் சமாவர்த்தனம், வரவேற்பு உபசாரம் ஆகியவற்றிலும் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதராய் சமூகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: சமாவர்த்தனம் 31 05 93 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு குமார சதாசிவம் அவர்களின் இல்லம் நீர்வேலி மத்தி, நீர்வேலி.

வரவேற்பு: மணமகன் இல்லத்தில் மறுநாள் 01-06-93 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ மு. சிவசுப்பிரமணியசர்மா தம்பதிகள்
பத்தைமேனி பிள்ளையார் கோவில்,
அச்சுவேலி.

திருமதி குமாசாமிசர்மா
திரு. கு. மணிக்குருக்கள்
கைலாசபிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர்.

திரு. திருமதி கோபாலசர்மா தம்பதிகள்
107, கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு.

(சி/5179)

சுபமஸ்து
(இருவீட்டார் அழைப்பு)

---

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் வைகாசி மீ 18ஆம் திகதி (31-05-1993) திங்கட்கிழமை அத்த நட்ஸத்திரமும் இடப லக்னமும் கூடிய காலை 5-52 மணி முதல் 6-42 மணி வரையுள்ள
★ சுபமுகூர்த்தத்தில் ★

| | |
|---|---|
| கல்வியன்காடு | மயிலிட்டி |
| சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள் | பிரம்மஸ்ரீ |
| தம்பதிகளின் | நாராயண சர்மா (சித்தானந்த ஐயர்) |
| புத்திரன் | தம்பதிகளின் |
| திருநிறை செல்வன் | புத்திரி |
| | திருநிறை செல்வி |
| **சுகுமார் சர்மா** | **சந்தானலட்சுமி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

விநாயகப் பெருமான் திருவருளால் கன்னிகாதானம் செய்து தனங்காவல் பிள்ளையார் கோவிலில் திருமணம் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராக கலந்து கொள்ளவும்.

மணமகள் இல்லத்தில் புலோலி தெற்கு 03-06-93 வியாழக்கிழமை வரவேற்பு உபசாரம் நடைபெறவுள்ளது.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
ச. நாராயணசர்மா (சித்தானந்த ஐயர்) தம்பதிகள்.

புலோலி - தெற்கு,
புலோலி.

(25867)

---

அகில இலங்கை

# இளங் கலைஞர் மன்றம்

மாதாந்த

# இசை நிகழ்ச்சி

ஈழநாதம் மக்கள் தினசரியின்
ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 30 — 05 — 1993 ஞாயிறு
மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5·00 — 5·45 வயலின் இசை
செல்வி சிவகலா சிவஞானம் — வயலின்
செல்வன் எஸ் துரைராசா — மிருதங்கம்

5-45 — 6-45 இசைக்கச்சேரி
செல்வி கனகாம்பரி பத்மநாதன் — பாட்டு
திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. ப. இரதிரூபன் — கடம்

6-45 — 7-15 மங்கள விளக்கேற்றல்
1. க. நந்தகுமாரன்
உரிமையாளர்-கலைமகள் வர்த்தக நிலையம்
2. இ. தேவராஜா
வர்த்தகர் - சோபனா ஆடை அகம்

தலைமையுரை:
திரு. கே. ஜெயரெத்தினம் அவர்கள்
(அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி, கோக்குவில்)

பிரதம விருந்தினர் உரை;
திரு செ. பத்மநாதன் அவர்கள்
(திட்டமிடல் பணிப்பாளர், யாழ் செயலகம்)

7-15 — 8-30 சிறப்பு நிகழ்ச்சி:
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்
வழங்கும்
ஊரெங்கும் போர்ப்பாட்டு கிராமிய
இசை நடன நிகழ்ச்சி

இசை ஆர்வலர்கள் அபிமானிகள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்!

மேற்படி மன்றத்தினர்.

(25859)

---

சாவகச்சேரி
கோவில் குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம்

## ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினர்

நடத்தும்

இலங்கை இந்து சமயப் பேரவைத் தலைவர்
"ஆத்மஜோதி"

## சிவத்திரு நா. முத்தையா

அவர்களின்

# 76ஆவது ஜெயந்தி விழா

காலம்: 30-05 1993 ஞாயிறு மாலை 5-00 மணி
இடம்: ஆலய முன்றல்

பொன்னாடை போர்த்தி ஆசியுரை வழங்கல்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)

பொற்கிழி வழங்கல்: ஆலய பரிபாலன சபையினர்

வாழ்த்துரை:
திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்
(விரிவுரையாளர், ஜப்பான் பல்கலைக்கழகம்)
திரு. அ. சண்முகதாஸ் அவர்கள்
(பேராசிரியர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

"செஞ்சொற்கொண்டல்"
மு. திருநாவுக்கரசு அவர்கள்
(நீதிமன்ற நீதிவான் - சாவகச்சேரி)

"வாகீசக் கலாநிதி"
கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.
(தமிழ் விரிவுரையாளர்)

குறிப்பு:
30-05-1993 பி. ப. 4. 30 மணிக்கு கோவில் குடியிருப்பு ஞானவீரபத்திரர் ஆலயத்திலிருந்து "ஆத்மஜோதி" நா. முத்தையா அவர்கள் மங்கள வாத்திய சகிதம் டி ஆலய அரங்கிற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

—ஆலயபரிபாலன சபையினர்.

சாவகச்சேரி.

(சி-5175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர்
# செல்லத்துரை சிவகுரு நினைவு மலர்

29 — 05 — 1993

## உதைபந்தாட்டத்தில் அவர் ஒரு கர்மயோகி

''சந்நியாசத்திலும் பார்க்க மேன்மையான சிறந்த ஞானத்தை வளர்க்கும் பயிற்சி, உதைபந்தாட்டம் ஆகும்.''

— இந்திய நாட்டு இளைஞர்களுக்கான உபதேசத்தில் இப்படிக் கூறினார் சுவாமி விவேகானந்தர்.

விளையாட்டு தூய உள்ளத்தை வளர்க்கும். தூய உள்ளத்தில் சமய மனப்பாங்கு ஊன்றி வளரும்.

அதனால்தான் விளையாட்டில் ஊறித் திளைத்த அமரர் சிவகுரு சமயத் தொண்டிலும் சிறந்து நின்றார்.

சுவாமி விவேகானந்தர் உபதேசித்த தத்துவத்தை, இன்றைய இளைஞர்களுக்கு செயல்வடிவில் காட்டியவர் அமரர் சிவகுரு.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரை அவர் ஒரு கர்மயோகி.

இளைஞனாக இருந்த காலத்தில் திருமலை கழக அணிகளின் சார்பிலும், திருமலை மாவட்ட அணியின் சார்பிலும், பின்னர் இலங்கை அரசாங்க சேவை அணி, அகில இலங்கை சுகாதார சேவைகள் அணி ஆகியவற்றின் சார்பிலும் உதைபந்தாட்டத்தில் சிறப்பாக விளையாடி திருமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பெருமை பல சேர்த்தவர்.

பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை ஸ்தாபித்து வழி நடத்தியவர்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் சரித்திரத்திலேயே, லீக்கில் இணைந்து, யாழ். நகருக்கு அப்பால் இருந்து இன்றும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரேயொரு கழகம் பொற்பதிதான். அதன் பிரதான அச்சாக இருந்து செயலாற்றியவர் அமரர் சிவகுரு.

1985 — 1988ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கழகத்தின் பயிற்சியாளராகச் செயற்பட்டு, அவருடன் இணைந்து பணியாற்ற எனக்கு ஒரு பெருவாய்ப்புக் கிடைத்ததை இன்று பெருமையுடன் நினைவு கூருகின்றேன்.

— ஏ. எஸ். குணரெட்ணம் —
உதவிப் பணிப்பாளர் (விளையாட்டுத்துறை),
வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார
விளையாட்டுத் துறை அமைச்சு

## சீரிய நிர்வாகத்துக்கு ஒத்துழைத்த வீரர்

திரு. சிவகுருவின் மறைவு தமிழீழ விளையாட்டுத் துறைக்கே ஓர் பேரிழப்பாகும்.

1973 ஆம் ஆண்டு முதல் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினதும், ஏனைய விளையாட்டுக் கழகங்களினதும், யாழ். மாவட்ட உதைபந்தாட்டத்தினதும் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

விளையாட்டுத் துறையின் சீரிய நிர்வாகத்துக்கும், விளையாட்டு மனப்பான்மையை நீதியுடன் செயற்படுத்துவதற்கும் அவர் வழங்கி வந்த உதவியை பெரும் மதிப்புடன் நினைவு கூருகின்றோம்.

— அ. தேவராசா, —
கௌரவ செயலாளர்,
யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்.

## விளையாட்டுத்துறைக்கு அவர் மறைவு பேரிழப்பு

பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்கும் அதன் உயர்ச்சிக்கும் அதன் புகழுக்கும் அல்லும் பகலும் உழைத்த, மறைந்த சிவகுரு அவர்களின் சேவை மனப்பான்மை விளையாட்டுத்துறையில் ஒரு முன்மாதிரியானது.

அவரது இழப்பு அவரது கழகத்திற்கு மட்டுமல்ல அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல, தமிழீழ விளையாட்டுத் துறைக்கே ஒரு பேரிழப்பாகும். அவர் விட்ட பணியைத் தொடர்வதே அவரது ஆத்மா சாந்தியடைய ஒரு நல்வழியாகும்.

— க. மகேஸ்வரன், —
பொதுச் செயலாளர்.
அரியாலை ஐக்கிய கழகம்.

## ஆன்மீகத் துறையிலும் தொண்டாற்றிய அடியார்

கல்லூரி வாழ்க்கையில் ஆரம்பித்த உதைபந்தாட்ட ஆர்வத்தை வெகுவாக வளர்த்து, தன் வாழ்க்கையின் ஓர் அங்கமாக அதை அமைத்துக் கொண்டதுபோல ஆன்மீகத் துறையிலும் தன்னை ஈடுபடுத்தி ஆலயத்தொண்டுக்கு ஒரு முன்னுதாரண புருஷராகத் திகழ்ந்தவர் அமரர் சிவகுரு.

1983 ஆம் ஆண்டு கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் செயலாளராகப் பொறுப்பேற்று அப் பணியை எல்லோரும் மெச்சும் வகையில் திறமையாகச் செய்து முடித்தவர்.

ஆலய ஆரம்ப காலங்களில் ஏற்பட்ட எல்லா வகையான இடர்களுக்கும் முகங்கொடுத்து, தன்மேல் சுமத்தப்பட்ட பணியை இறைபக்தியுடன் நிறைவேற்றிய பெருமைக்குரியவர் அவர்.

எல்லா ஆலயங்களிலும் தொண்டு செய்வதற்கு பின்னிற்காத தொண்டன். குறிப்பாக பொற்பதி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் இவரின் தெய்வீகப் பணி இணைந்திருப்பதைக் காணலாம்.

இயன்மவைத்தியராக கொழும்பு, யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைகளில் பணிபுரிந்த காலத்திலும் அரச சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னரும் தனது வைத்தியத் துறையை தெய்வப் பணியாகக் கருதி தனது நோயாளரைப் பேணியவர்.

அமரர் சிவகுரு அவர்கள் பிறருக்கு உதவுவதில் முன்னிற்பவர். பல சிறந்த குணங்களையும் தன்னகத்தே கொண்டவர். இவரது மறைவு எமது கிராமத்துக்கு மட்டுமன்றி ஏனையவர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் நினைவு என்றுமே நீங்காது.

— நா. நித்தியானந்தன் —
தலைவர்,
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில்.

## உதைபந்தாட்டம் பழக்குவதில் குருவாக விளங்கிய சிவகுரு

எமது பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னின்று உழைத்த பெருந்தகை அமரர் செல்லத்துரை சிவகுரு.

கொக்குவில் பொற்பதியில் இருந்த இளைஞர் சக்தியை ஒன்று திரட்டி புது அமைப்பு ஒன்றை ஸ்தாபிப்பதில் அவர் பெருமுயற்சி எடுத்தார். அதில் வெற்றியும் கண்டார்.

அன்று முதல் கடந்த மாதம் அவர் மறையும்வரை அவர் சிந்தனை எப்போதும் எமது கழகத்தையும், உதைபந்தாட்டத்தையும் மட்டுமே சுற்றிச் சுற்றி நின்றது என்றால் அது மிகையாகாது.

தமது குடும்பத்தில் எவ்வளவு பாசம் வைத்திருந்தாரோ அதே அளவு பாசத்தை, பிணைப்பை எமது கழகத்தின் பால் அவர் கொண்டிருந்தார்.

### பொற்பதி வீரன் ஒருவனின் உள்ளத்திலிருந்து ...

கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தமது குடும்ப அங்கத்தவர்கள் போல் பேணினார்.

சில வேளைகளில் தந்தையைப் போல கண்டிப்புடன் உறுமுவார். அடுத்த கணம் தாயைப்போல அன்புடனும் பாசத்துடனும் அரவணைப்பார். பிறிதொரு நேரத்தில் மூத்த அண்ணனைப் போல வழிகாட்டுவார். உணர்ச்சி வசப்பட்டால் குழந்தையைப் போல தேம்புவார்.



தோற்றம்: 27 — 07 — 1936

மறைவு: 29 — 04 — 1993

**செல்லத்துரை சிவகுரு**

(ஓய்வுபெற்ற உடற்கூற்றியல் சிகிச்சையாளர், யாழ். ஆஸ்பத்திரி; பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர், செயலாளர்; யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர்; முன்னாள் செயலாளர்).

அவர் பெயரில் மட்டும் சிவகுரு அல்ல. செயலிலும் விளையாட்டுத்துறையில் — குறிப்பாக உதைபந்தாட்டத்தில் — எமக்கு குருவாக இருந்து வழிகாட்டியவர். அதனால் தான் அவர் வைத்தியத்துறையில் பணியாற்றிய போதும், அவரை மக்கள் ''சிவகுரு மாஸ்டர்'' என்று அழைத்தார்கள்.

ஆரம்பத்தில் பயிற்சியாளராகவும் வீரராகவும் எம்முடன் விளையாடிய அவர் — தமது ஐம்பதாவது வயது வரை முக்கிய ஆட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடிய அவர் — தன்னுடல் தளர்ந்த பின்னும் விடாது களத்தில் பயிற்சியாளராக நின்று கழக அணியின் உயர்வுக்கு உழைத்தார்.

அணியின் ஒழுக்கத்தைப் பேணுவதில் அவர் கண்டிப்பானவர். எமது வீரர்களிடையே பணிவு, அடக்கம், கீழ்ப்படிதல், பெரியவர் சொற் கேட்டல், பொய் பேசாமை போன்ற நற்பண்புகளை நெறிப்படுத்தினார்.

விளையாட்டின் வேகத்தில் உணர்ச்சிவசப்பட்டாலும், விளையாட்டு விதிகளை மீறாமல் இருப்பதை உறுதிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொற்பதியூர் பொலிவுற நற்பணிகள் ஆற்றியவர்

விளையாட்டுத்துறை மூலம் யாழ். மாவட்டம் முழுவதிலும் பிரபல்யமான வீரர் சிவகுருவின் மறைவு கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை உருவாக்கி, அதனை சிறந்த முறையில் வழி நடத்தி, சாதனைகள் பல புரிந்தவர்; அமைதியும் சாந்தமும் ஒருங்கே அமையப் பெற்றவர்; விட்டுக் கொடுக்கும் உயர்ந்த பண்பும், நேர்மையும் மிக்கவர்; எனது பிரதேச ரீதியிலான விளையாட்டுப் போட்டிகள் சீராகவும் சிறப்பாகவும் நடந்தேற தொடர்ச்சியாகப் பல வழிகளிலும் உதவி வந்தவர்.

உதைபந்தாட்டத்தில் அதிக பற்றுடைய அவர், தனது கழகம், பிரதேசம், மாவட்டம் விளையாட்டுத்துறையில் — குறிப்பாக உதைபந்தாட்டத்தில் — உயர்ந்து நிற்க ஊண், உறக்கமின்றி உழைத்த உத்தமர்.

விளையாட்டுத் துறைக்கு அப்பால், சமூக, சமயப் பணிகளிலும் தம்மை பிணைத்துக் கொண்ட ஒரு தொண்டர்.

நேர்மையான — விசுவாசமான — நற்பிரசையை, சிறந்த வழிகாட்டியை நாம் இழந்து நிற்கிறோம்.

ஆ. மகாலிங்கம் -
(பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபரும், நல்லூர்)

## எல்லாக் கழக வீரர்களினதும் அன்பைப் பெற்ற நண்பர்

1973 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழகம் இணைக்கப்பட்டதை அடுத்து, ஒரு விளையாட்டு வீரனாகவும், விளையாட்டுத்துறை நிர்வாகியாகவும் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்துடன் தம்மைப் பிணைத்துக் கொண்டார் திரு. செல்லத்துரை சிவகுரு.

பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை ஸ்தாபித்து, அதன் செயலாளராக இருந்து அதனை வழிநடத்தியதுடன், அக்கழகத்தின் சார்பில் தானும் ஒரு விளையாட்டு வீரனாகப் போட்டிகளில் கலந்து கொண்டு அதனை ஒரு சிறந்த கழகமாக உயர்த்திய பெருமை அமரர் சிவகுருவையே சாரும்.

இரவு, பகல், அதிகாலை என்று பாராமல் தமது முழு நேரத்தையுமே அவர் உதை [illegible] உதைபந்தாட்டத்தின் பால் அவர் கொண்ட பற்றுதலையே, காட்டுகிறது.

தம்மை அணுகிய வீரர்கள் அனைவருக்கும் கழக வேறுபாடின்றி, வைத்திய உதவிகளைப் புரிந்ததன் மூலம் அவர்கள் அனைவரதும் அன்பைப் பெற்றார்.

''பொற்பதி மாஸ்டர்'' என ஏனையோரால் அழைக்கப்பட்ட அவரைத் தெரியாத உதைபந்தாட்ட ரசிகர்களே யாழ்ப்பாணத்தில் இல்லை எனலாம்.

நீண்டகாலம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உபதலைவர்களில் ஒருவராகக் கடமையாற்றியதுடன், அவ்வப்போது எமக்கு நல்ல ஆலோசனைகளையும் வழங்கி வந்தார். எதையும் சரிவரச் செய்ய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த அவர், தமது கழக வீரர்களை மட்டுமல்லாது, யாழ். உதைபந்தாட்ட வீரர்கள் அனைவரையும் ஒழுங்கான — கட்டுக்கோப்பான — பாதையிலே வழி நடத்த பாடுபட்ட ஓர் உயர்ந்த மனிதர்.

எனது தனிப்பட்ட மதிப்பிற்குரியவரும், நண்பருமான அவரது மறைவு அவரது கழகத்திற்கு மட்டுமல்ல, யாழ். உதைபந்தாட்டத்திற்கே பேரிழப்பாகும்.

எஸ். கிளிபேட்
அன்ரனிப்பிள்ளை,
கௌரவ செயலாளர்,
யாழ்ப்பாண உதைபந்தாட்ட சங்கம்.

எமது விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் செல்லத்துரை சிவகுருவின் 31ஆம் நாள் நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி கழகத்தின் சார்பில் இந்த நினைவு மலரை பிரசுரிக்கின்றோம்.

*- பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம்*

விளம்பர இலக்கம்:- (கி-5178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். இந்து மகளிர் கல்லூரி

## கால் கோள் விழா 29

வடமாகிலக் கல்விப் பணிப்பாளர்

### திரு. இரா. சுந்தரலிங்கம்

இந்து மகளிர் கல்லூரி பொன்விழாக் காணுவது கண்டு புளகாங்கிதமடைகிறேன். கேடில் விழுச் செல்வம் கல்வி என்பதை நாடி நாளும் தேடி உழைக்கும் நல்லவர், வல்லவர் கூடி எழுப்பிய கலைக்கோயில் இந்து மகளிர் கல்லூரியாகும். இக்கலைக் கோயில் பல்துறையிலும் புகழ்பூத்துக் குலுங்க எனது இதயமார்ந்த நல்லாசிகள் என்றும் உரித்தாகுக.

அன்பும், அருளும், பண்பும், பணிவும், புனிதப் பொலிவும் மிளிரும் பெண்கள் எங்கள் சமூகத்தில் பெருக வேண்டும். இதற்கு ஆக்கபூர்வமான சேவைகளை ஆற்றும் கலைக்கூடங்களை ஆற்றுப்படுத்தும் அதிபர்கள், ஆளுமையும், பேரார்வமும் கொண்டு மண்ணுக்குச் செய்யும் தொண்டென தியாக உணர்வுடன் செயற்பட வேண்டும். பொன்விழாக் காணும் இக்கல்லூரி பல்கிப் பெருகி பல்கலை வித்பன்னர்களைத் தோற்றுவித்து புகழ்க் கொடி பறக்கப் பொலிவுறுவதாக.

யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

### திரு. சி. வேலாயுதம்

பொன் விழாக்காணும் யாழ். இந்து மகளிர் கல்லூரி வட பால் விளங்கும் கலாசாரப் பிணைப்பும், சைவநெறிச் செறிவும் கொண்ட பெண்கள் கல்லூரி ஆகும். இன்று 2,400 க்கும் அதிகமான பெண் குழந்தைகள் பயிலும் கலைக் கூடமாக விளங்கும் இக்கல்லூரி, பல்கலையும் பயிற்றுவிக்கும் வெற்றியைப் பெறுவதாகுக. கண்டிப்பும், காரிய சாதுரியமும் மிக்க செல்வி ப. இராமநாதனின் அரவணைப்பில் வளர்ந்த இக் கல்லூரி, பெண்கள் கல்லூரிகளில் தனியிடம் பெறச் செய்ய வேண்டியன பல உண்டு. பணியின் பெருமையை உணர்ந்து தியாக உள்ளத்தோடு ஆசிரிய உலகு ஒன்றுபட்டு நன்று பல செய்யுமாயின் முன்னணியில் இக் கல்லூரியைத் திகழ வைக்க முடியும் பண்போடு கூடிய ஒழுக்க விழுமியங்களைக் கொண்டு இக்கல்லூரி விளக்கமுறுவதாக.

யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர்

### திருமதி திவ்யசிரோன்மணி நாகராஜா

தமிழர் பிரதேசத்தின் வடபுலத்தில் மங்கையர்க்கோர் மங்கலமாய், பல கலைகள் வழங்கும் கலைக்கோயிலாய் நிமிர்ந்து நிற்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி பொன்விழாக் காணுவதையிட்டு அகமிக மகிழ்கிறேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சி பாரிய கூட்டுமுயற்சி எந்தக் கருமத்திலும் பக்க பலமாய் நின்ற பெற்றோர், நலன் விரும்பிகள், அறிவும், ஆற்றலும், சேவையுணர்வு கொண்ட ஆசிரியர்கள், நன்முறையில் நெறிப்படுத்தி உதவிபல புரிந்த கல்வித்திணைக்கள அதிகாரிகள் என்போர் இக்கூட்டு முயற்சியின் பங்காளிகள். இவர்கள் யாவரும் பொன்விழாக் காணும் இந்நாளில் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

பதினேழு ஆண்டுகாலமாக ஆசிரியர், பிரதி அதிபர், அதிபராகக் கடமையாற்றி நெருக்கமுறப் பிணைந்த காரணத்தால், அன்னை இவளை தாய்மையுள்ளத்திற் கசிந்துருகும் உவகைப் பெருக்கோடு கண்குளிரக் கண்டு நல்லாசி கூறுவதுடன், மேன்மேலும் வளர்ச்சி பெற்று உயர்வு கண்டு நாட்டிற்கும், நங்கையர்க்கும் நற்பணியாற்ற வேண்டுமென நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர்

### திரு. அ. பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சகோதர பாடசாலை என பல் வகையாலும் சிறப்பித்துப் பேசப்படும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பொன்விழாக் காணும் பொலிவு கண்டு மகிழ்கிறோம். எமது பெண் பிள்ளைகள் சைவச் சூழலிலே கல்வி பெற வேண்டுமென்ற பெரு நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி ஆற்றிவரும் சேவை மகத்தானது இன்று இக்கல்லூரி நமது தேசத்தில் ஒரு முன்னிலைப் பாடசாலையாக வெற்றி நடைபோட்டுத் திகழ்கின்றது.

இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக இதுவரை காலமும் உழைத்த, இன்றும் உழைத்து வரும் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் மனதார வாழ்த்துகின்றேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்

### திரு. இ. மகேந்திரன்

இன்று தமிழ்ப் பெண்ணின் கல்வியும் சமூக நிலையும் உயர்ந்தும் வளர்ந்தும் வருகின்றன. இதற்கு வித்திட்டு உழைத்து வளர்த்தது யார்? பல்வேறு காரணங்களை எடுத்துக் காட்டலாம் அவற்றுள் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆற்றிய அரும்பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. போற்றத்தக்கது. திறமைமிக்க அதிபர்கள் அயராது உழைத்த ஆசிரியர்கள் என்போர் இக் கல்லூரியின் வெற்றிக்கு வழிவகுத்தனர், உழைத்து வருகின்றனர் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

''பெண்ணின் பெருந்தக்க யாவுள.........''

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / சபை செயலாளர்

### திரு. கா. குகபாலன்

யாழ். இந்து மகளிர் கல்லூரி இந்துப் பெண்களின் கல்விக்கு கடந்த ஐம்பது வருடங்களாக பெருந் தொண்டாற்றி பொன் விழாவினைக் கொண்டாடுகின்றது கல்வி சார், கல்விசாராத துறைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளமைக்கு இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர்கள், வழிநடாத்திய அதிபர்கள், பெற்றோர்கள், ஆகியோரின் அளப்பரிய பங்களிப்பின் விளைவேயென்றால் மிகையாகாது. இக்கல்லூரி இவ்வாண்டு கொண்டாடிவரும் பொன்விழா நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறவும், எதிர்காலத்தில் கல்லூரி மேன்மேலும் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று இந்துப் பாரம்பரியத்தினை கட்டிக் காப்பாற்ற தொடர்ந்து உறுதி எடுக்க வேண்டுமெனவும், இந்நாளில் வாழ்த்துகிறேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர்

### செல்வி புஷ்பா செல்வநாயகம்

யாழ். நகரில் சைவப் பெண்களின் கல்வி, பண்பாடு, சைவப்பற்று முதலியவற்றை வளர்கவெனும் விழுமிய நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி தனது பொன்விழாவினை நிறைவாகக் கொண்டாடும் இவ்வேளையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் என்னுளம் கனிந்த வாழ்த்துக்களை பெருமிதத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

ஒழுக்கம், வித்தை, சமயம், விஞ்ஞானம், கலை, விளையாட்டு முதலிய பல துறைகளில் சிறந்து விளங்கும் இக்கல்விக்கூடம் பல அரும் பெண் சுடர்மணிகளையும், வனிதா இரத்தினங்களையும் உருவாக்கி நாட்டின் சேவைக்கு அர்ப்பணித்துளது. இன்று புது எழிலுடன் விகசிதமுற்று மிளிரும் இக்கல்லூரி வைரவிழா போன்ற பல விழாக்களை காணவேண்டுமென்றும், நாட்டுக்கும் நம்மினத்திற்கும் பயன்கள் பல தந்து நம்போன்ற பெண்களை ஆற்றுப்படுத்த வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

குருமகா சந்நிதானம்

### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்

அன்புடை நெஞ்சத்தீர்,

யாழ். இந்துமகளிர் கல்லூரி பொன்விழா எடுப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். மாணவிகளின் நிறைவான இறை பக்தியையும், சைவத்தைப் பேணிக் காக்கும் உயர் பண்புகளையும் அவற்றிற்கேற்ப அணியும் உடைகளையும் கண்டு யாம் மகிழ்ந்தோம். மாணவர் முக்கியமாகக் கடைப்பிடித்தொழுக வேண்டியது, பக்தி, பணிவு, மனவுறுதி, விடாமுயற்சி. இவை அவர்கட்கு நிச்சயம் வெற்றி ஈட்டுவன. இவ்விழாவில் இணைந்துள்ளோர் அனைவருக்கும் இறையருள் முன்னிற்க எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

துர்க்கா துரந்தரி

### செல்வி தங்கம்மா அப்ப...

சைவப்பற்றையும் தமிழ்ப்... டையும், தாய் மொழி அபிம... ஏற்படுத்தும் புனித நோக்கத்தே... வருவது யாழ். இந்து மகளிர் க... பது வெளிப்படை மன உறுதியு... உள்ளமும், பெரியோர்கள், ... களை மதிக்கும் பண்பும் மாண... யில் வேரூன்ற வேண்டும் என்... திற்கொண்டு கல்விப் பணிய... யாழ் இந்து மகளிர் கல்லூரி பொ... காண இருப்பது மகிழ்ச்சி த... யாகும்.

## யாழ்.இந்துமகளிர்கல்லூரி உதி...

பொன்விழாப் பச்சை வண்ணக்கொடி வாயிலில் ஒளி வீசி வரவேற்க கம்பீரமாகக் காட்சி தரும் எங்கள் கல்லூரி அன்னையை, நன்றி உணர்வோடு இருகரம் கூப்பி வணங்குகின்றோம். எங்கள் கல்லூரி படிப்படியாக உயர்ந்த வரலாற்றினைத் தருவதில் பழைய மாணவிகளாகிய நாம் பெருமையடைகிறோம்.


சைவமும் தமிழும் பொலிவுற்று விளங்க, நாவலர் பெருமான் காட்டிய நல்வழியையே பின்பற்றி யாழ் இந்துக் கல்லூரி அதிகார சபையினர், யாழ். குடாநாட்டில் 13 கல்லூரிகளை நிறுவி நிர்வகித்து வந்தனர். இந்து சமயச் சிறுமிகளுக்கு தனியாக, ஒரு மகளிர் கல்லூரி உருவாக வேண்டும் என்ற அவர்களின் நீண்ட காலக் கனவு நிறைவேற, 1943 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் நாள், அதிகாரசபை நிறுவிய மகளிருக்கான ஒரே ஒரு கல்லூரி தான் எங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரி

யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து பிரிந்து ஒரு கிளையாக இந்துக் கல்லூரியினதும், அத்துடன் இணைந்த ஏனைய பாடசாலைகளினதும், அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ், இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக, கஸ்தூரியார் வீதியில் உள்ள இல்லம் ஒன்றில் இந்து மகளிர் கல்லூரி முதன்முதலாக இயங்கத் தொடங்கியது.

அந்நாளில், யாழ். இந்துவின் அதிபராக இருந்த, துணிவும் ஆற்றலும் மிக்க திரு. ஏ. குமாரசுவாமி அவர்களே, இக் கல்லூரியின் முதல் அதிபராகக் கடமை புரிந்து நிற்க, செல்வி காயத்திரி பொன்னுத்துரை அவர்கள் (திருமதி காயத்திரி கணேசன்) தற்காலிக அதிபராக, கல்லூரியின் முன்னேற்றத்தில் கருத்துடையவராகச் செயற்பட்ட பொழுதே, சிறிதளவில் ஒரு விடுதியையும் ஆரம்பித்து வைத்தார் 8 ஆசிரியர்களையும், 110 மாணவிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியில் நான்கு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையிலான வகுப்புகளே இருந்தன.

விசாலமான காணியில்

கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை கூடியதன் காரணமாக, கல்லூரி 1944ஆம் ஆண்டு பெப்ரவரி மா... 27ஆம் நாள் யாழ். இந்து... விளையாட்டு மைதானத்தி... மாற்றப்பட்டது. அவ் வே... இக் கல்லூரியின் அதிபரா... செல்வி. மூத்து அச்சை... அவர்கள் கடமையாற்றினா... வகுப்புகள் சிரேஷ்ட கல்... ரித் தராதரப்பத்திர வகு... வரை அதிகரித்தன. இ... மகளிர் கல்லூரி இட நெ...




...கடியால் அவதிப்படுவ... அறிந்த திருமதி விசாலா... அம்மா சிவகுருநாதர் எ... அம்மையார், இந்து ச... கலாசார பாரம்பரியங்க... அடிப்படையாகக் கொ... மகளிர் கல்லூரி ஒன்றை நி... வேண்டும் என்ற தனது ... ரிய எண்ணம் செயற்ப... தக்க வகையில், அன்புள்... கொண்டு, அரசடி வீதி...

ஆசிரியர் குழாம் சார்பாக

### திருமதி ரீ. சச்சிதானந்த யோகீஸ்வரன்

பொன்போன்ற சமூகத்தை உருவாக்கிப்
பொழில் நிழலாம் தண்மதிபோற் பொழிந்து வாழி!
பொன்மகள் போல் நிறைவுபெற்று, எமை
நின் தண்நிழலால் - சீதமுற்று - நலமுடன் வாழ
நல்வழி காட்டும் கல்லூரித்தாயே, அம்மா! நீ
என்றும் பூத்துப்பொலிந்து பொலிவுடன் திகழ
உன் ஆசிரியர் குழாம் என்றும் - மனமார
உளமாரத் தம் சென்னி தாழ்த்தி வணங்கி நிற்கும்.

கல்லூரி மாணவ முதல்வர் தலைவி

### செல்வி தேவிகா நவரத்தினம்

அரை நூற்றாண்டு காலமாக அரும்பெரும் சேவை புரிந்து அரிய பெரிய வல்லுனர்களை அவனிக்களித்திட்ட அன்னையே! அடுத்துவரும் ஆண்டுகளிலும் அறிவையர் பலரை அவனிக்களித்திட வேண்டி என் அகமெனும் மலர் கொண்டு அனுதினம் உனையே அன்புடன் வாழ்த்துகின்றேன். வாழிய நீ ......... என்றென்றுமே ........!




| | | | | |
|---|---|---|---|---|
| ஜெயசித்ரா<br>நகை மாளிகை<br>177D, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | வேலணை பல நோக்குக்<br>கூட்டுறவுச் சங்கம்<br>வேலணை. | ஊர்காவற்றுறை<br>பல நோக்குக் கூட்டுறவுச்<br>சங்கம்<br>ஊர்காவற்றுறை. | நல்லூர் பல நோக்குக்<br>கூட்டுறவுச் சங்கம்<br>யாழ்ப்பாணம். | புங்குடுதீ...<br>பல...<br>கூட்டு... |
| மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்<br>50, பெரிய கடை,<br>யாழ்ப்பாணம். | தீபா நகையகம்<br>177/2, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | இந்திரா நகையகம்<br>183, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | புதிய ராதிகா<br>நகை மாளிகை<br>189, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | ஸ்ரீவாணி...<br>173, க... |
| கே. இராமச்சந்திரன்<br>15/21, மாரியம்மன் வீதி,<br>திருநெல்வேலி. | பசன் ஹவுஸ்<br>65, கே. கே. எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். | ரவி அன் ராஜ்<br>77, மின்சார நிலைய வீதி,<br>யாழ்ப்பாணம். | நியூ ஆனந்தா<br>ஜுவலர்ஸ்<br>185, கே. கே. எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். | அலங்கா...<br>21/7, ... |

(விளம்பர இல. 25864)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரி பொன் விழா சிறப்பு மலர்

## ...ிழா 29 — 05 — 1993

துர்க்காதுரந்தரி
**...தங்கம்மா அப்பாக்குட்டி**

...பப்பற்றையும் தமிழ்ப் பண்பாட் ...ய் மொழி அபிமானத்தையும் ... புனித நோக்கத்தோடு இயங்கி ...ழ். இந்து மகளிர் கல்லூரி என் ...படை மன உறுதியும், கருணை ... பெரியோர்கள், பெற்றோர் ...க்கும் பண்பும் மாணவர் மத்தி ...ன்ற வேண்டும் என்பதைக் கருத் ... கல்விப் பணியாற்றி வரும் ... மகளிர் கல்லூரி பொன் விழாக் ...ப்பது மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி

★


சிவதர்மவள்ளல்
**கலாநிதி க. கனகராசா**

இந்து மகளிர்க்கு இசைவான
ஏற்றமிகு கல்வி தரும்
யாழ். இந்து மகளிர் கல்லூரி
மேலும் பல்லாண்டு பணியாற்ற
வாழ்த்துவதும் 'மில்க்வைற்'

★

## ...லூரி உதித்து வளர்ந்த வரலாறு

...ண்டு பெப்ரவரி மாதம் ...ஆம் நாள் யாழ். இந்துவின் ...யாட்டு மைதானத்திற்கு ...ற்றப்பட்டது. அவ்வேளை ... கல்லூரியின் அதிபராக, ...ல்வி. மூத்து அச்சையா ...ர்கள் ...மையா...னார். ...ப்புகள் சிரேஷ்ட கல்லூ ... தராதரப்பத்திர வகுப்பு ...ர அதிகரித்தன. இந்து ...ளிர் கல்லூரி இட நெருக்



...டியால் அவதிப்படுவதை ...றிந்த திருமதி விசாலாட்சி ...ம்மா சிவகுருநாதர் என்ற ...ம்மையார், இந்து சமய ...ாசார பாரம்பரியங்களை ...டிப்படையாகக் கொண்ட ...ளிர் கல்லூரி ஒன்றை நிறுவ ...ண்டும் என்ற தனது உய... எண்ணம் செயற்படத் ...க வகையில், அன்புள்ளம் ...ாண்டு, அரசடி வீதியில் தனக்கே உரித்தாக இருந்த (24 பரப்பு) நிலப்பரப்பைக் கல்லூரிக்கு என அன்பளிப்புச் செய்தார். அம்மையார் அவர்களே, எங்கள் கல்லூரி ஸ்தாபகர் என்னும் பெருமையையும் பெற்றார். வரது கணவர் ஆர். சிவகுருநாதர் அவர்களும், அவரது நெருங்கிய உறவினர் திருமதி வள்ளியம்மா சிவகுரு அவர்களும், 16 நிலப்பரப்புக் காணியை நன்கொடையாகத் தந்து உதவினர். காப்புக் கடவுளாகிய விநாயகருக்கு, இராஜவரோதய விநாயகர் கோவிலும் கல்லூரி வளவினுள் ஆரம்பத்திலேயே இருந்தது ஒரு வரப்பிரசாதமே.

மேலதிகமான 60 பரப்பு நிலத்தை இந்துக் கல்லூரி அதிகார சபையினர் சுற்றாடலில் வசித்த அயலவரிடம் குறைந்த விலைக்குவாங்கினர். 1945ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் நாள், எங்கள் கல்லூரி முன்னாள் முகாமையாளர் சேர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட வைபவத்தை, அமைதியாகக் கொண்டாடினோம். அரசடி வீதியில் உள்ள நிலப்பரப்பில் இடுக்களினால் வேயப்பட்ட வகுப்பறைகளைக் கொண்ட எங்கள் கல்லூரியில் நாங்கள் அடியெடுத்து வைத்த நன்னாள் அன்றைய தினமேயாகும்.

கல்லூரி அதிகார சபை உறுப்பினர்கள், கட்டடங்களுக்கான நிதியைச் சேர்ப்பதற்கு அயராது சலியாது உழைத்ததன் பயனாக ஆரம்பத்தில் வகுப்புகள் இருந்த நிலைமை விரைவில் மாறி அழகிய கட்டடங்களாகக் காட்சி தந்தன. கல்லூரி உயரத் தங்கள் நற்சேவையை நல்கிய அதிகார சபையினரே, கல்லூரியை உருவாக்க வழி வகுத்த சிற்பிகள் என்னும் பெருமைக்கு உரியவர்களாவர்.

**திருமதி ஞா. சொக்கலிங்கம்**
பழைய மாணவர் சங்கம்

எங்கள் கல்லூரிக்குக் கடந்த காலங்களில், அளப்பரிய சேவையை ஆற்றிய அதிபர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

**...ஸ்வரன்**

...ழி!

...ம்.

**...னம்**

... அரிய பெரிய வல் ...களிலும் அறிவையர் ...காண்டு அனுதினம் ...ன்றுமே .........!

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
பல்கலைக்கழக உடற்கல்வித்துறைப் பணிப்பாளர்
**திரு. சி. தியாகராசா**

யாழ்ப்பாணம இந்து மகளிர் கல்லூரி பொன் விழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன் இக்கல்லூரி கல்வியிலும் விளையாட்டிலும் இதர கலைகளிலும் புகழ்பூத்த நிறுவனமாக விளங்க எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக.

பொன்விழாச் சபையின் செயலாளர்
**திரு. நா. செல்வரத்தினம்**

இந்து மகளிர் கல்லூரி தனது 50ஆவது வயதினை எட்டிப் பிடித்துள்ளது. இந்தப் பெண்களின் கல்வி விருத்தியைக் கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியானது அதன் நோக்கத்தினை தவறாது கடைப்பிடித்து வருகின்றது. தொடர்ச்சியாக இக்கல்லூரி கல்விசார் துறைகளில் விருத்தி பெற்றுவருகின்றது. தொடர்ந்தும் வளர்ச்சி பெற்று நாட்டின் சிறந்த கலைக்கூடமாக மிளிர வேண்டும் என எல்லாம் வல்ல நல்லூர் முருகனை இறைஞ்சி இப்பொன் விழா நாளில் வாழ்த்துகின்றேன்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்
**பேராசிரியர் அ. துரைராசா**

யாழ். இந்து மகளிர் கல்லூரி தனது பொன்விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது பிரதேசத்தில் இந்துப் பாரம்பரியம் தளர்ந்து கொண்டு வருகின்ற வேளையில் இந்து மகளிர் கல்லூரி போன்ற இந்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கல்லூரிகள் தங்களாலான அளப்பரிய சேவையினைச் செய்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அந்த வகையில் இக்கல்லூரி கடந்த 50 ஆண்டுகளாக அளப்பரிய சேவை செய்து வருகின்றது.

கல்வி வளத்தினைக் கல்விச்சார் துறையில் தகுந்த முறையில் ஊட்டப்படுமாயின் இக்கல்லூரியானது யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மிகச் சிறந்த கல்லூரியாக திகழ்வதற்கு வெகு தூரமில்லை. இக்கல்லூரி மேன்மேலும் பல சாதனைகளைப் புரிந்து இந்து மகளிர் வாழ்வில் ஒளிபிறக்கச் செய்யவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்
**திரு. கா. மாணிக்கவாசகர்**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியாகி பொன்விழா கொண்டாடப்படுகிறது திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையார் மனமுவந்தளித்த காணி இன்று மாபெரும் கல்விக்கூடமாகத் திகழ்கின்றது. இந்து சமயப் பெண்கள் தமது சமயச் சூழலில் கல்வி கற்பதற்கும், ஒழுக்க நெறியினைப் பேணுவதற்கும் இக்கல்லூரி வழிசமைத்து வருகிறது. பொன்விழா சிறப்புடன் நிறைவெய்தி மென்மேலும் வளர்ச்சி பெற்று கல்வித்துறையில் பெரும் பங்கினை ஆற்ற வேண்டுமென மனதாரவாழ்த்துகிறேன்.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**

யாழ். இந்து மகளிர் கல்லூரி தனது பொன் விழாவினைக் கொண்டாடுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது யாழ் நகரில் இக்கல்லூரி நிறுவப்பட்ட காலத்தில் சைவப் பெண்கள் கல்வி பயில மகளிருக்கென்று தனியானதொரு பாடசாலை இருந்திருக்கவில்லை. இதனை நிறைவேற்ற ஸ்தாபகர்கள் முன்வந்தமை வரவேற்கத்தக்கதாகும் அறுபதுகளின் பின்னர் யாழ். மாவட்டத்தில் பல பாடசாலைகள் முக்கியத்துவத்தை இழந்துள்ளன இக்காலப் பகுதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பெருவளர்ச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் வெற்றிக்கு இன்றைய, பழைய அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் பங்களிப்பு பிரதானமானது ஆகும். எனவே மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

யாழ் மாநகர ஆணையாளர்
**திரு. வே. பொ. பாலசிங்கம்**

பொன் விழாக் காணும் யாழ். இந்து மகளிர் கல்லூரியினை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஒரு கல்விக் கழகத்தின் வரலாற்றில், அதன் ஐம்பது ஆண்டுகள், அதனது பிள்ளைப்பராயம் என்பது சிந்தனையாளர் கூற்று. எனவே கல்லூரியின் உன்னத வளர்ச்சிக்குப் பொன்விழா கால்கோளாக அமைய வேண்டுமென்பதே எமது பிரார்த்தனையாகும். எம்மினத்தின் மாணவிகளது எதிர்காலக்கல்வி வளமுடன் வளர்ச்சியடைய யாழ். இந்து மகளிர் கல்லூரி வழிசமைக்க வேண்டுமென எனது சார்பிலும், யாழ். நகர மக்களின் சார்பிலும் மனதாரவாழ்த்துகின்றேன்.

நல்லூர் பிரதேச செயலாளர் / மேலதிக அரசாங்க அதிபர்
**திரு. ஆ. மகாலிங்கம்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி பொன் விழாக் கொண்டாடுவதையிட்டு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு அதன் அபிலாஷைகளை நிறைவேற்ற எப்பொழுதும் முயன்றுவரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த முன்னாள் அதிபர்களும், ஆசிரியர்களும் நன்றியுடன் நினைவுகூர வேண்டியவர்கள். தொடர்ந்தும் இக்கல்லூரி எமது சமுதாயத்திற்கு நற்பணிகளையாற்றி உயர்ந்து விளங்க எல்லாம் வல்ல எம்பிரானைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி பொன்விழாக் கொண்டாடுகின்றது. சுடச்சுடரும் பொன்போல் இக்கல்லூரியின் புகழ் அக்கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்களாலே மேலோங்கி வந்துள்ளது. இக்கல்லூரியிலே படித்தவர்களுக்கு ஒரு தனிப் பண்பும் பக்குவமும் உண்டு. என்னுடைய இரண்டு பெண்களும் இக்கல்லூரியிலே படித்தவர்கள். இதனால் இக்கல்லூரியின்பால் பெரு விருப்பும் பிணைப்பும் ஏற்பட்டன. பொன் விழாக் கொண்டாடும் இக்கல்லூரி பல்லாண்டு காலம் தன் தனிப் பண்புகளுடன் மிளிர வேண்டுமென இறையருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர்
**திரு. க. பரமேஸ்வரன்**

கல்வியே தமிழரின மிகப் பெரும் சொத்து. காலமெலாம் அனுபவத்தினால் கண்டறிந்த உண்மை இதுவாகும். கல்விச் செல்வத்தைப் புறக்கணிப்பின் இனத்தின் வரலாற்றுப் புகழினை நிலைநிறுத்த மற்றெல்லாச் செல்வங்கள் ஒன்றிணைந்து கைகொடுத்தும் இயலாமல் போய்விடலாம்.

இவ்வாறான கல்விச்செல்வத்தை தமிழ் உலகத்திற்கு வழங்கிவரும் யாழ். இந்து மகளிர் கல்லூரி தனது பொன்விழாவை இவ்வாண்டு கொண்டாடுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இக்கல்லூரி மென்மேலும் வளர்ந்து பல்துறை வல்லுனர்களை உருவாக்கிச் சமுதாயத்திற்களிக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

யாழ். இந்துக் கல்லூரியினதும் அதனுடன் ஒருங்கிணைந்த கல்லூரிகளினதும்
அதிகார சபையின் செயலாளர்
**வைத்திய கலாநிதி வே. யோகநாதன்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி தன் பொன் விழாவினைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்துப் பெண்களின் சமய கலாசார, பண்பாடுகளுக்கேற்ற கல்வி வசதிகள் கொண்டதாக 1943 இல் இருந்து வளர்ந்து இன்று இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுடனும் 70 ஆசிரியர்களுடனும் பெரிய விருட்சமாக வளர்ந்துள்ளமை பாராட்டுக்குரியது. பொன் விழாவினை ஒருங்கிணைந்து கொண்டாடும் அதிபர், ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றையும் அதிகாரசபையின் சார்பில் வாழ்த்துகிறேன்.


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ...நாக்குக் ...ங்கம் ...ம். | புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் | யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம். | அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். | ரவர் கோப்பி அன்ட் கூல் பார் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். | வைகுந்தம் குளோத் சென்ரர் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |
| ...கா ...கை ... வீதி, ...ம். | ஸ்ரீவாணி நகைமாளிகை 173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | ரஞ்சனாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் A17 18, 18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | சண்முகா ட்ரேட்சென்ரர் 167, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். | வடிவேல் புத்தகசாலை 155, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். | சரண்யா ரெக்ஸ் 174, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| ...ந்தா ... ... வீதி, ...ம். | அலங்கார் நகை மாளிகை 81/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | தேவி அரிசி ஆலை அச்சுவேலி, யாழ்ப்பாணம். | லிங்கநாதன் அன் கோ 1814, பெரியகடை, யாழ்ப்பாணம். | நியூ சி. கே. பி. ரெக்ஸ் பெரிய கடை, யாழ்ப்பாணம். | அபிராமி உணவகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூச்சி அகற்றப்பட்ட 35 நாள் கறுப்பு நிற அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P. நேசன், 408/14, பிரதான வீதி, சண்டிக்குளி அல்லது 32/10, அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (25837)

சுகாதார முறைப்படி வறுத்துத் திரித்த தரமான சன்பிறாண்ட் மிளகாய்த் தூள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (25332)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25494)

நன்கு வளர்க்கப்பட்ட 2 மாதம் நிரம்பிய பேட்டுக் குஞ்சுகள் (ஹைலைன் பிறவுண்) உடன் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. 1010/9. கே. கே. எஸ் வீதி, (தலையாழி ஒழுங்கை), யாழ்ப்பாணம். (25853)

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டு கழக வீதி), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (25857)

## தேவை

மூன்று அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. சம்பள விவரம் நேரில் பேசலாம். இல. 03, சீனியர் லேன் (தட்டாதெருச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (25845)

## சைக்கிள் தேவை

புதிய அல்லது நல்ல நிலையில் உள்ள மகளிர் சைக்கிள் உடன் தேவை ஏசியா, ஈஸ்ரேண் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 38, ஆஸ்பத்திரி வீதி, (ஐயனார் கோவில் முன்பாக) கொட்டடி, யாழ்ப்பாணம். (25863)

பெண்களுக்கான சைக்கிள் தேவை. விற்க விரும்புவோர் வேலை நாட்களில் சதாஸ் மோட்டோர்ஸ், 56/2, புதிய ஸ்ரான்லி வீதியில் தொடர்பு கொள்ளவும் (6212)

## அம்பாள் திருமண சேவை

32 வயது, Dental Doctorக்கு பட்டதாரி மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகலிங்கம் ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் மேற்கு வீதி, நல்லூர் (25851)

## பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25587)

## வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணில் இருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6305)

## வெளிவந்துவிட்டது

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்குண்டு. மேலும் விவரங்களுக்கு: 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-4720)

## ஒலிபரப்பு கூட்டுத்தாபன தலைவர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக குமார் ரூபசிங்காவும்—

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பீற்றர் அபயசேகராவும் கலாசார, தகவல்துறை அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்கு பண்டாராவால் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

# தமிழீழ பொதுக்கல்வி தேர்வு

யாழ்ப்பாணம், மே 29

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு-1993 இற்கான விண்ணப்பப் படிவங்களை மாணவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம் திகதி புதன் கிழமை தததமது கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய கட்டணத்துடன் பிரதிக்கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

மேற்படி பரீட்சைக்கு தற்பொழுது ஜி. சீ. ஈ சாதாரண தரத்தில் கல்வி கற்பவர்கள், கடந்த வருடம் தோற்றியவர்கள், சித்தியடையாதவர்கள் ஆகியோர் பாடசாலையினூடாக விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

தேர்வு நாடிகள் ஒரு பாடத்திற்குத் தோற்ற விரும்பின் விண்ணப்பக் கட்டணமாக 15 ரூபாவும், ஆறு பாடங்களுக்கு மேல் தோற்றுபவர்கள் 100 ரூபாவும் செலுத்த வேண்டும் என்று தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

## பாராட்டு

யாழ்ப்பாணம், மே 29

திருநெல்வேலி சிவன் கோவில் வருடாந்த மகோற்சவ காலத்தில் தொடர்ந்து பத்துத் தினங்கள் பெரிய புராண விரிவுரைகளை நிகழ்த்திய யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியரும், காரைநகர் கம்பன் கழக அமைப்பாளருமான திரு. த. சிவகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ். ஹட்டன் நஷனல் வங்கி உதவி முகாமையாளர் திரு. எம். ராஜேந்திரம், திரு சிவகுமாரனுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டுரையும் வழங்கினார்.

இந்த தொடர் விரிவுரை நிகழ்ச்சியை திருநெல்வேலி சிவசக்தி இந்து இளைஞர் மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். (இ)

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

## செல்வன் க. சினோஜன்

(சினோ)

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த கமலேந்திரன்-சுதர்மினியின் செல்வப் புதல்வன் சினோஜன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 29-05-93 இல் தனது அன்னை இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். செல்வன் சினோவை அவரது அப்பா, அம்மா, அப்பப்பா, அத்தைமார், அம்மப்பா, அம்மம்மா, கனடா பெரியம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், ஜேர்மன் ராதாமாமா, சித்தப்பா, சித்தி மற்றும் சுதாமாமா, கிரிமாமா. ருசிச்சித்தி சுகிச்சித்தி, குட்டிச்சித்தி, வினோச்சித்தி மற்றும் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் தத்திச்செல்லும் முத்துக்கண்ணன் சினோஜனை பல கலைகளும் பெற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

சரவணபவனம்,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (25840)

# அழைப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
புகழ் பூத்த அதிபர்

## பொ. ச. குமாரசாமி

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
அவர்களை நினைவு கூருமுகமாக
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மணவர் சங்கம்
நடத்தும்

## நினைவுப் பேருரை

"சென்ற காலத்து பழுதிலாத் திறன்"
நிகழ்த்துபவர் – திரு. க. சி. குலரத்தினம்

காலம்: 30-05-1993 ஞாயிறு
பிற்பகல் 3.30 மணி

இடம்: குமாரசுவாமி மண்டபம்

குறிப்பு: அமரர் பொ. ச. குமாரசாமியின் குடும்பத்தவரையும், உறவினர்களையும் இதிற் கலந்து சிறப்பிக்கும்படி விசேடமாக அழைக்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம். (சி 5169)

## உதைபந்தாட்டம்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த வேண்டும் என்பதில் அவர் மிகக் கண்டிப்புடன் இருந்தார்.

எமது கழகம் சாதனைகள் பல படைப்பதற்காய் களத்தில் தம் உடல் வேதனைகளை மறந்து பயிற்சி தந்தவர்.

மாரடைப்பால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், மறைவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்னர் கூட, எமது கழக உறுப்பினர்கள் சிலரை ஆஸ்பத்திரியில் தனது படுக்கைக்கு அருகே அழைத்து, அன்று மாலை நடைபெற இருந்த உதைபந்தாட்டப் போட்டிக்கு அணியைத் தயார் செய்வது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் என்பதை எண்ணும்போது எம் நெஞ்சம் விம்முகிறது.

உதைபந்தாட்டத்தில் மட்டுமன்றி எமது கழக அணிகள் தட, கள விளையாட்டு, எல்லே, கரப்பந்தாட்டம், கிரிக்கெட், வலைப்பந்தாட்டம், ஹொக்கி போன்ற விளையாட்டுக்களிலும் சாதனைகள் பல புரிய ஊக்குவித்து உதவியவர்.

எமது கழகத்தின் செயற்பாட்டிற்காக தமது வீட்டின் முன் அறையையே கழகத்தின் அலுவலகமாக மாற்றி, கழகத்தின் செயற்பாட்டை ஊக்கப்படுத்தினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக கழக வீரர்கள் ஒவ்வொருவரையும் தனது பிள்ளை போல் பாவித்து அவர்கள் அனைவரதும் சுக துக்கங்களில் பங்கு கொண்டு, அவர்களுடன் தம்மைப் பிணைத்துக் கொண்ட பாசமிகு ஆசான் அவர்.

அவர் விட்டுச் சென்ற பணியில் செயற்பட்டு, கழகத்தின் சார்பில் சாதனைகள் பல நிலைநாட்டுவதே நாம் அவருக்கு ஆற்றும் அரும் கைம்மாறாக இருக்கும்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். ★

# முதலாம் ஆண்டு நினைவு



மன்னார் மாவட்ட ஆயுதப் பொறுப்பாளர்

## மேஜர் கந்தன்

(நாகேந்திரம் - பாலசுந்தரம்)
(ஆலங்கேணி, பூநகரி)

மண்ணுலகில்: 15-03-1968

விண்ணுலகில்: 09-06-1992

திதி: 29 — 05 — 1993

அன்புச் செல்வமே!
ஆண்டு ஒன்று சென்றாலும்,
உன் நினைவுகள் மாறாதிருக்கும்.

- குடும்பத்தினர்.

(25865)

## வெளிவந்துவிட்டது

# மாற்றம்

சஞ்சிகை: 03
(25850)

# BECON

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

## G.A.Q. 94
## B.A. 94

பேராதனை
பல்கலைக் கழகம்
[வெளிவாரி]

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

ஆரம்பம்:

B.A. 29-5-93
சனி 1.00 p.m

G.A.Q 1-6-93
செவ். 6.30 a.m.

(சி-4777)

# நன்றி நவிலல்

## அப்பையா இராசநாயகம்

கடந்த 14-05-1993 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிபுரிந்தவர்களுக்கும் மேலும் 20-05-1993 அன்று நடைபெற்ற இறுதிக்கிரியைகளின்போது பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும், அஞ்சலிகள் செலுத்தியவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்கள்: இ. மயூர்நாதன்
இ. சற்குருநாதன்
இ. சிவகுருநாதன்

சகோதரர்: அ. செல்வநாயகம்

ஐங்கரன் அரிசி ஆலை,
இணுவில் தெற்கு. (25861)

# உதயன்

## இரட்டிப்பு வாய்ப்பு!

தீவிரவாதத் தொடர்புடைய சிலர் வடக்கு-கிழக்கிலிருந்து கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் வந்து தங்கியுள்ளனர். இத்தகைய நபர்கள் குறித்து பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டும்— இது இலங்கை முப்படைகளின் உயர்பீடமான கூட்டுப்படைத் தலைமையகம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக விடுத்த அறிக்கையின் சில வரிகள்.

இந்த அறிக்கையின் பின் கொழும்பு நகரிலும், அதன் புறநகரப் பகுதிகளிலும் பொலிஸாரும், படையினரும் தமது வழமையான கெடுபிடிகளை - பணம் சம்பாதிக்கும் வழிமுறைகளை— ஆரம்பித்திருக்கிறார்கள்! நீர்கொழும்பு தொடக்கம் தெஹிவளை வரையான பிரதேசங்களில் இரண்டு நாட்களில் சோதனை என்ற பெயரில் 500க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழர்களுடைய வீடுகளில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன.

கொழும்பில் தமிழர்கள் தகுந்த காரணம் இன்றிக் கைது செய்யப்படுவதும், சோதனை என்ற பெயரில் வீடுகள் படையினரால் சூறையாடப்படுவதும், மற்றும் பல வகைகளிலும் தமிழர்கள் தொல்லைகளுக்குள்ளாக்கப்படுவதும் இது முதற்தடவை என்பதல்ல; புதியதும் அல்ல.

பொதுவாக 1983ஆம் ஆண்டின் பின்னரும், குறிப்பாக வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பமான பிறகும், தெற்கில் சிங்களவர் மத்தியில் வாழும் தமிழர்களுக்கு இவ்வாறான தொல்லைகள், கஷ்டங்கள், சங்கடங்கள் தாராளமாக அடிக்கடி கொடுக்கப்படுகின்றன! கொழும்பில் ஓர் அசம்பாவிதம் நடந்துவிட்டால் இவை உச்சக் கட்டத்தை அடைந்துவிடுவதும் இயல்பான நடைமுறை என்றாகிவிட்டது.

கொழும்பில் நடக்கும் வன்செயல்கள், குண்டு வெடிப்புகள், கொலைகள் போன்றவற்றைச் செய்தவர்கள், பின்னணியில் இருப்பவர்களைப் பற்றிச் சரியாகத் துப்புத் துலக்கும் திறமை பொலீஸாருக்கும், படையினருக்கும் இல்லை. தமது திறமையின்மையை மூடிமறைப்பதற்காக ஊடுருவல் குறித்து அறிக்கை விடுவது, பின்னர் சோதனை என்ற பெயரில் சூறையாடி, தமிழர்களை இம்சிப்பது என்ற எழுதாத விதிமுறைகளை அவர்கள் வகுத்திருக்கிறார்கள். இங்கே ஒரு கல்லில் இரு மாங்காய் விழுத்துவது போல, கைது செய்தவர்களை விடுவிக்க லஞ்சம், சோதனைகளின் போது சூறை என்று பணம் சம்பாதிக்கவும் வழி பிறக்கிறது!

அடுத்தடுத்து இடம்பெற்ற லலித், பிரேமதாசா கொலைகள் பொலீஸாரும் படையினரும் பணம் சம்பாதிக்கவும், தெற்கு வாழ் தமிழர்களுக்குத் தொல்லை கொடுக்கவும் கிடைத்த இரட்டிப்பு மடங்கு வாய்ப்பாகும். இது அரசாங்க உயர் மட்டத்துக்கும் தெரிந்த ஒன்றே. அவர்களின் ஆதரவு, அனுசரணையுடனேயே நடக்கிறது என்று நினைப்பது தவறல்ல.

கடந்த செவ்வாயன்று கூட்டுப் படைத் தலைமையகம் விடுத்த அறிக்கை வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு அரசாங்க, தனியார் அலுவலகங்கள், தொழிற்சாலைகள் என்பனவற்றில் வேலை வாய்ப்பு எதுவும் வழங்கக்கூடாது என்று மறைமுகமாக உத்தரவிடுவதாகவும் அமைந்திருந்தது! இது தமிழர்களை மறைமுகமாகத் தண்டிப்பதற்கு ஒப்பானதாகும். அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதற்கு வெளிச்சமான எடுத்துக்காட்டெனலாம்.

வடக்கு-கிழக்கில், தமது தாயகத்தில் இல்லாத நிம்மதியும் வசதியும் தெற்கில் கிடைக்கும் என்று தமிழர்கள் எண்ணும் வரைக்கும், கொழும்பில் தொழில் செய்யும் தேவை இருக்கும் வரைக்கும் இந்தத் தொல்லைகளும், அவலங்களும் தொடரவே செய்யும்!

# நாளை நடப்பவை

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும், பழைய மாணவர் ஒன்றிய தின வைபவமும் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி. இ. ராசரட்ணம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ச)

o o o

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் நினைவுப் பேருரைத் தொடரில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு முன்னாள் அதிபர் அமரர் பொ. ச. குமாரசாமி நினைவுப் பேருரை இடம்பெறும்.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திரு. க. சி. குலரத்தினம் "சென்ற காலத்து பழுதிலாத் திறன்" என்ற தலைப்பிலான நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (ச)

o o o

தனிநாயகம் தமிழ் மன்றத்தின் தமிழ் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரியில் நடைபெறும். பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-30)

o o o

எதிர்வரும் நான்காம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் யாழ். உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள புகைப்படக் கண்காட்சி தொடர்பான கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. (க-111)

o o o

வட இலங்கை மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வண்ணை மேற்கு தனியார் மருத்துவ மனையில் நடைபெற்றுவரும் கருத்தரங்குத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு "மூளை நாள விபத்துகள்" பற்றி யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் திருமதி எஸ். நாகேந்திரா விரிவுரை நிகழ்த்துவார். [க]

o o o

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இலங்கை இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையாவின் 76ஆவது ஜெயந்தி விழா நாளை ஞாயிற்றுக் கிழமை ஆலய முன்றிலில் நடைபெறும்.

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், திரு. முத்தையாவிற்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிப்பார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. க. துரைராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், ஜப்பான் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன், சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு உட்பட பலர் வாழ்த்துரை வழங்குவர். (த-117)

o o o

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நாளை மாலை 5 மணிக்கு இலக்கிய அவை கூட இருக்கின்றது.

"இலக்கிய இன்பம்" என்னும் தலைப்பில் திரு எஸ். தம்பையா இலக்கிய விருந்தினை வழங்குவார். (உ 51)

o o o

தமிழ் சோதிடர் ஒன்றியத்தால் வாராவாரம் நடத்தப்படும் சோதிட ஆய்வரங்கு நாளை காலை ஒன்பது மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது.

ஆய்வரங்கில் "மாரக திசை" பற்றிய ஆய்வுகள் இடம்பெறும். ஆய்வரங்கை ஓய்வுபெற்ற விஞ்ஞான கல்வி ஆலோசகர் திரு. ஐ. வைத்திய நாதர் நெறிப்படுத்துவார்.

o o o

யாழ் ஆரியகுளம் சந்தி, பருத்தித்துறை வீதியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நாளை மாலை 4 மணிக்கு நவீன இலக்கியம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கலாநிதி சுரேஸ் துரைராஜா, திரு. ஐ சாந்தன், திரு. த. தணிகாசலம் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (ஒ)

## கொலை நடந்தது மந்துவிலில்

கடந்த புதன் இரவு வெட்டுண்டு இறந்த லண்டன் சிவில் எஞ்சினியர் சதாசிவம் செல்வக்குமார் (40 வயது) மந்துவில் மேற்கில் செம்பாடு என்ற அவரது கிராமத்தில் வைத்தே கொலையுண்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றைய உதயனில் மேற்படி கொலை தொடர்பான செய்தியில் மந்துவில் என்பதற்குப் பதிலாக மட்டுவில் என்று செய்தி வெளியாகி இருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்.

# விளையாட்டு நிகழ்வுகள்

"கே. வி. வி. வி." வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் வருடாந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முப்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக இச்சுற்றுப்போட்டி ஆட்டங்கள் அமையும்.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ காலை 8 30 மணி:- இறான் கொப்பர்ஸ் வி. க. அணி எதிர் வீனஸ் வி.க. அணி

★ பிற்பகல் 1.30 மணி:- சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி எதிர் மானிப்பாய் பரிஷ் அணி

தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமையும் இச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும்.

o o o

"டொனால்ட் கணேஷ குமார்" கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்— ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட— கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

இந்த ஆட்டத்தில் ஷப்ரா அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதும்.

o o o

யாழ். மாவட்ட கிராமிய

## உற்சவங்கள்

அரியாலை கிழக்கு அருள்மிகு அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத் தலத்தில் நாளை ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொரூபப் பவனியும் நடைபெறும். (த)

o o o

மானிப்பாய் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று சனிக்கிழமை இரவு 8 30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா "பக்த கௌரி" என்ற பொருளில் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (த)

o o 8

நாகர்கோவில் அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் நடைபெறும். (உ-117)

## பாடசாலைகளில்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனி பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. அ. மு. அருணாசலம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (த-90)

உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி:- மயிலங்காடு ஞானகலா அணி எதிர் உரும்பராய் உதயசூரியன் "ஏ" அணி

மாலை 4.30 மணி:- நாவாந்துறை சென். மேரீஸ் அணி எதிர் வரெமு றோயல் "ஏ" அணி

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணி முதல் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

## பரீட்சை முடிவு விரைவில்

கொழும்பு, மே 29

எழுதுவினைஞர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு இவ்வார இறுதியில் அனுப்பிவைக்கப்படும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒருலட்சத்து 65 ஆயிரம் பேர் இப்பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்துப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## பிலிப்ஸ் நினைவுக் கூட்டம்

வைத்திய கலாநிதி அமரர் ஜே. பி. சி பிலிப்ஸின் இரண்டாவது ஆண்டு நினைவுக் கூட்டமும், திருப்பலியும் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும், ஆலய மண்டபத்திலும் நடைபெறும்.

பிலிப்ஸ் ஞாபகார்த்தசபை ஒழுங்கு செய்துள்ள கூட்டம் வைத்திய கலாநிதி செங்காதரன் தலைமையில் நடைபெறும். (த-51)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே 29

வவுனியா மாவட்டத்தில் பம்பைமடுவில் ரெலோ தேசத் துரோகிகளுடன் கடந்த புதன்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் பழநி (அந்தோனிப்பிள்ளை வில்வராஜா, சாஸ்திரி கூழாங்குளம்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். [ஒ-5]

# யாழ். இந்து மகளிர் கல்லூரி....

(4,5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமக்களை நாம் நன்றியோடு நினைவு கூருகிறோம்.

1945ஆம் ஆண்டு திருமதி ஜெம்மாராணி சிற்றம்பலமும், 1946 தொடக்கம் 1948 வரை திருமதி கிளேறா மொட்வாணியும் அதிபர்களாகக் கடமையாற்றிய காலங்களில் கல்லூரி பிரபல்யம் அடையத் தொடங்கியது. ஆங்கில பாடத்தைக் கற்பதில் மாணவர் ஆர்வம் கொண்டனர். அடுத்ததாகதிருமதி சறோஜினி ராவ் அதிபராக, பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு சகல துறைகளிலும் கவனஞ்செலுத்தப்பட்டது. இவரது நிர்வாகத்தின் கீழ் கல்லூரி இரண்டாந்தரப் பாடசாலையாக 'ரம் உயர, மாணவர் எண்ணிக்கையும் 1,100ஆக அதிகரித்தது. மாணவரின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், நூலகமும் சிறப்பாக அமைந்தது. அஞ்சா நெஞ்சமும், தளராத மன உறுதியும் கொண்ட அதிபர் ராவ் அவர்களின் காலத்தில் 1954ஆம் ஆண்டு கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அதிகார சபை அங்கத்தவர்கள், பல பிரமுகர்களின் உதவியுடன் கல்லூரிக் கட்டடங்களுக்கான நிதியைத் திரட்டியும் ஒரு [illegible] பெறுமதியான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பை நடத்தியும், கோலாகலமாக ஒரு களியாட்ட விழாவையும் நிகழ்த்தியும் வெற்றி கண்டனர். கல்லூரிக்குச் சுற்றுமதில் கட்டப்பட்டது.

### முதலாந்தரப் பாடசாலையானது

1954 தொடக்கம் 1975 வரை, திருமதி விமலா ஆறுமுகம் அவர்கள் அதிபராகி, அயராது பணிபுரிந்தார். க. பொ. த. உயர்தரம் கலைப் பிரிவுக்குக் கூடுதலான மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவரது காலத்திலே கல்லூரி முதலாந்தரப் பாடசாலையாகத் தரம் யர்த்தப்பட்டது. மாணவிகள் அகில இலங்கை மெய்வல்லுநர் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கல்லூரிக்குப் புகழ் ஈட்டினர். கல்லூரிக்கான அழகியதொரு பிரார்த்தனை மண்டபமும் கட்டப்பட்டு இன்று அது பொலிவுடன் காட்சி தருகிறது.

1968 ஆம் ஆண்டு, 1ஆம் ஆண்டில் இருந்து 4ஆம் ஆண்டுவரை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 1962 ஆம் ஆண்டிலேயே எங்கள் கல்லூரியும் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. 1976 தொடக்கம் 1986 யூன் மாதம் வரை செல்வி பத்மாவதி [illegible] இலங்கை முழுவதும் பரவக் காரணமாய் இருந்தது அவரது நிர்வாகத் திறமையே.

தற்பொழுது உள்ள அலுவலகம் விஞ்ஞானகூடம் அனைத்தும் இவரது காலத்தில் உருவாகியவையே. கல்லூரி விநாயகர் ஆலயமும் புதுப்பிக்கப்பட்டு, விடுதிப் பாதுகாப்பாக மதில் ஒன்றும் கட்டப்பட்டது.

க. பொ. த. உயர்தரம், கலை, விஞ்ஞானம், மருத்துவம் ஆகிய பகுதிகளில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்தது. மாணவர் அகில இலங்கை ரீதியிலான சகல போட்டிகளிலும் முதலாம், இரண்டாம் இடங்களையும் தங்கப் பதக்கங்களையும் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டனர்.

### ஆரம்பப் பாடசாலை தோற்றம்

1978ஆம் ஆண்டுடன் பாலர் வகுப்புத் தொடக்கம் 5 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்களைக் கொண்ட பகுதி இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை என்ற பெயரில் தனியாகப் பிரிந்து (கல்லூரியின் அயலிலே) திருமதி சி. விக்கினேஸ்வரா அவர்களை அதிபராகக் கொண்டு இயங்கி வருகின்றது.

1986 யூன் மாதத்தில் இந்து கல்லூரி அதிபராகப் பதவி ஏற்ற இன்றைய அதிபர் திருமதி [illegible]வ்ய சிரோன்மணி நாகராஜா அவர்களும் கல்லூரி வளர்ச்சி அடையப் பல வழிகளிலும் தனது பங்களிப்பை வழங்கித் திறமையாகச் செயற்பட்டு வருகிறார். கல்லூரி ஆசிரியர்கள் தொகை 70 ஆகவும், கற்கும் மாணவர் தொகை 2,200 ஆகவும் அதிகரித்துள்ளன.

யாழ். நகரில் முன்னணியில் நிற்கும் கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் எங்கள் கல்லூரியை, இந்த உயர் நிலைக்கு வளர்த்தெடுக்க என்றும் ஒத்துழைப்பு நல்கிய அன்றைய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரையும், ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் செயற்பட்டுப் பொன் விழாக் கொண்டாடத் தோள் கொடுத்து நிற்கும் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினரையும் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

அறிவொளி பரப்பவல்ல மாணவ பரம்பரையை உருவாக்கி வைத்த ஆசிரியர் பெருந்தகைகளையும், கல்லூரி உயர்வுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்த முன்னாள் அதிபர்களையும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்:

எங்கள் கல்லூரி நிறுவப்பட்ட நோக்கம் நிறைவேற சைவப் பெருமக்கள், கல்லூரி அபிமானிகள் முன்வந்து கைகொடுப்பதன் மூலம் தமிழும் சைவமும் தழைத்தோங்கக் கல்லூரி உயர்வுறும் என்பது நம்பிக்கை.

வாழ்க எங்கள் கல்லூரி, வளர்க அதன் பணி.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

31 — 05 — 1993 திங்கட்கிழமை முதல்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக நகை விற்பனை நிலையத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ள நான் 31 - 05 - 1993 திங்கட்கிழமை காலை 11-55 மணிக்கு யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள 190/6 ஆம் இலக்க அறையில்

## பவளகேசரி நகை மாளிகை

என்னும் வியாபார நிலையத்தை ஆரம்பிக்கின்றேன் என்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றேன்.

த. பவளகேசரி (பவளம்),
நீர்வேலி.

பவளகேசரி நகை மாளிகை,
190/6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(258-6)

# நன்றி நவிலல்

★ ——————— ★

28 - 05 93 அன்று சிவபதமடைந்த திருமதி பூபாலசிங்கம் மகேஸ்வரி அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து எமக்கு ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் சாத்தியும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய எமது உற்றார், உறவினர் நண்பர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
பூ. சுரேஸ்வரன்
(மகன்)
யா/பல்கலைக் கழக கலைப் பீடம்

இணுவில் தெற்கு.
இணுவில்

(6224)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் வீரகத்தி முத்துலிங்கம்

[சாவகச்சேரியின் நீண்டகால வர்த்தகரும், லிங்கம்ஸ் உரிமையாளரும்

வையத்துள்: 1932—01—25
வானுறையும் தெய்வத்துள்: 1993—04—29

அப்பா அப்பா என்று தினமும் அரற்றுகின்றோமே
அப்பா ஏதும் செப்பாமல் நீங்கள் சென்ற இடம் தான் எங்கே?
சிறப்புக்கள் பல செய்து எம்மைச் சிறக்க வைத்த தெய்வமே
சிறப்பெல்லாம் நாம் இழந்து நிற்க நீங்கள் சென்று விட்ட தேசமெங்கே?
கண்மூடித்திறக்கும் ஒருகணப் பொழுதில் மறைந்து விட்டீர்
கண்ணிழந்த குருடரென தவிக்கின்றோம் இக்குவலயத்தில்
காலம்பல சென்றிடினும் எம் கவலைக்கு மருந்தில்லை
காசினியை நீங்கும்வரை உங்கள் நினைவுகளோ மறையாது.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்தும், உதவிகள் பல நல்கியும் எமது துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று சனிக்கிழமை (93 - 05 - 29) காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள் [illegible]

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

[illegible]

### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது மாகாண அரசை மேற்படி இரு முன்னணியும் கூட்டுச் சேர்ந்து அமைத்திருப்பதை அடுத்து—

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் இரு மாநகர சபைகளையும் கலைக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின்படி—

பிரிவு 154 ஜி) மற்றும் 9 ஆவது அட்டவணை, பட்டியல் (மாகாணசபை பட்டியல்) ஆகியவற்றின் கீழும்—

உள்ளூராட்சி சபைகளை கலைக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

எனினும் அப்படி ஒரு சபையைக் கலைப்பதற்கு முன்னர் அதற்கான வலிதான காரணங்களை வெளிப்படுத்தும் நீதியான விசாரணை ஒன்று நடைபெற வேண்டும் என்றும் மேற்படி அரசமைப்பு திருத்தத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இதற்கு அமைய—

இரு மாநகரசபைகளையும் கலைப்பதற்கான முன்னேற்பாடாக—

விசாரணையை நடத்தும் ஏற்பாட்டை மேல்மாகாண சபை ஆரம்பித்திருக்கிறது.

மேல் மாகாணத்தின் கீழ் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் முறையான வகையில் நிர்வகிக்கப்படவில்லை என்று அம்மாகாணத்தின் புதிய விவசாய, உள்ளூராட்சி, கூட்டுறவு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சிச் சபைகளில் இடம்பெற்ற தவறான நடைமுறைகளையும் அவர் பட்டியலிட்டுக் கூறியுள்ளார்.

### கைக்கு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரித்த திட்டத்திற்குரிய பணத்தை பெற வேண்டாம் என்று கொழும்பு அலுவலகம் அறிவுறுத்தியிருப்பதாக அறிய வந்துள்ளது.

வேறொரு நாட்டின் நிதி உதவியைத் தமது நிறுவனம் பெறக்கூடாது என்ற நிலைப்பாட்டை கொழும்பு அலுவலகம் கொண்டுள்ளதே இதற்குக் காரணமாம்.

பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மக்களைப் பொறுத்த வரையில், இன்னொரு உள்ளூர் தொண்டர் நிறுவனம் இத்தகைய திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தால் அதற்குரிய பணம் கிடைத்து அவர்கள் பயன் பெற்றிருக்கலாம் — என்று மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

"போரூட்" வகுத்த திட்டம் சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கு உதவுவதாக இருந்தது. அது இப்போது வெறும் கானல் நீராகிவிட்டது !(அ-3)

### 50 வீத மக்களின்..

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

களிலும், ஒரு குடியேற்றத் திட்டத்திலும் தாம் ஆய்வுகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

தமது ஆரம்பக் கணிப்பீட்டின்படி —

யாழ். மாவட்டத்தில் அனைத்து மக்களும் ஏதோ ஒரு வகையில் மனோநிலை பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள் என்பதும் —

அவர்களில் 50 வீதமானவர்களின் நிலை மோசமாகியுள்ளது என்பதும் தெரிய வந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மோசமான மன உளைச்சலுடன் காணப்படும் இவர்கள் வாழ விருப்பமின்றி தற்கொலை செய்ய முனைபவர்களாகவும் —

இரவில் காணும் பயங்கரமான கனவுகளால் அவர்கள் பாதிக்கப்படுவதாகவும் —

யுத்தத்தின் காரணமாக வாழ்வுக்கான சகல உரிமைகளும் மறுக்கப்படுவதாலேயே இந்த நிலையை அவர்கள் அடைந்திருப்பதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

இன்று கொழும்பு திரும்பும் அவர், ஜூலை மாத இறுதியில் இங்கு வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை [illegible] திட்டம் ஒன்றை நடைமுறைப் [illegible] பிட்டார். (உ-3)

### லலித் கொலைச் சம்பவம்:

# கொலைஞனின் பின்னணி பற்றிய தகவல் விரைவில்!

## பொலீஸார் அறிவிப்பு

கொழும்பு, மே 28

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவருமான லலித் அத்துலத் முதலியின் படுகொலைக்குப் பொறுப்பான பயங்கரவாத அமைப்பின் பெயரை தாம் விரைவில் வெளியிட விருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை —

அத்துலத் முதலியைக் கொலை செய்தவர் என்று சந்தேகிக்கப்படும் கந்தையா ரகுநாதன் உடலில் காணப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயம், அத்துலத் முதலியின் மெய்ப்பாதுகாவலரின் 9 மி.மி பிஸ்டலில் இருந்து புறப்பட்ட குண்டினால் ஏற்பட்டதாகும் என்பது இது பற்றி நடத்தப்பட்ட பரிசோதனையில் [ballistic tests] இருந்து தெரிய வந்துள்ளதாக அரச பகுப்பாய்வாளர் ஒருவர் கொழும்பு நீதிவானிடம் தெரிவித்துள்ளார். (இ-எ)

## சயனைட்டால் உயிரிழந்ததாக தீர்ப்பு!

கொழும்பு, மே 29

லலித் அத்துலத்முதலியின் கொலையை அடுத்து கிருலப்பனை, முகலன் வீதியில் சடலமாக காணப்பட்ட அப்பையா பாலகிருஷ்ணன் சயனைட் நஞ்சருந்தியதால் உயிரிழந்தார் என்று கொழும்பு நீதிவான் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார். (த-எ)

# மரண அறிவித்தல்கள்

## இலட்சுமணபிள்ளை ஸ்ரீநிவாசன்

இலட்சுமணபிள்ளை ஸ்ரீநிவாசன் 24-05-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் புங்குடுதீவு காலஞ்சென்ற ஆசிரியமணி மு. இலட்சுமணபிள்ளையினதும், பொன்னம்மாவினதும் அன்பு மகனும், ஜெயஸ்ரீயின் அன்புக் கணவரும், பிரசன்னா, ஜெயலக்ஷனின் அன்புத் தந்தையும், கந்தர் மடம் காளிதாசன்—பராசக்தி தம்பதிகளின் மருமகனும், ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், நல்லதம்பி, கனடாவில் வசிக்கும் ஜானகி, கலைவாணி, உஷா, கல்யாணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஷ்ணுதாசன் (சவுதி), ரவிதாசன், சுகன்னி (உகண்டா), ஸ்ரீமதிகள் நாகேஸ்வரி, சுதாமதி, மேரி ஹெலன், Dr. திவாகராசா, மகாலிங்கம், கீர்த்திகுமார், திரிபுராந்தகன் ஆகியோரின் மைத்துனரும், அன்பழகனின் (உகண்டா) சகலனும், சிவபாதசுந்தரம் (ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்), தெய்வீகராணி (டிறிபேக் கல்லூரி, ஆசிரியை) ஆகியோரின் பெறாமகனுமாவார்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா. சிவபாதசுந்தரம்
(பெறாமகன்)

93/2, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம்.

(25872)

## தம்பித்துரை பூரணம்

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தம்பித்துரை பூரணம் 28-5-1993 (நேற்று) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (29-5-1993) நண்பகல் 12 மணிக்கு ஊரெழு கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் பொக்கணை மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. செல்வநாயகம்
(மகன்)

(25870)

## கதிரவேலு கந்தசாமி

அளவெட்டி தெற்கு பிளவதரவையைச் சேர்ந்த கதிரவேலு கந்தசாமி (இளைப்பாறிய தபால் விநிதர்) 28-5-93 இல் காலமானார். இவர் பரமேஸ்வரி (ராசாத்தி)யின் அன்புக் கணவரும், நந்தகுமார், சிவகௌரி, சித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதா, கருணாகரன் ஆகியோரின் மாமனாரும், பிருந்தா, கீர்த்தனா, கிருஷாந்தன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29-5-93) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பரமேஸ்வரி (ராசாத்தி)
(மனைவி)

பிளவதரவை,
அளவெட்டி தெற்கு.

(5938)

## சாமுவேல் றோக்கப்பர் யோசேப்

[ஐயாத்துரை]

சாமுவேல் றோக்கப்பர் யோசேப் 28-05-93 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற கிறிஸ்ரினா இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், சாமுவேல் பென்சமின், காலஞ்சென்ற சாமுவேல் சத்தியாப்பிள்ளை (இராசதுரை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-05-93) சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் 96, பழைய பூங்கா வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக யாழ். மரியன்னை பேராலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெ. அ. சான்ஸ்
(பெறாமகன்)

96, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.

(25878)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org